## இனிமையான குழந்தைகளே! நாம் சிவவம்சி பிரம்மா முகவம்சாவளி பிராமணர்கள். நமது ஈஸ்வரிய குலம் அனைத்தையும் விட உயர்ந்தது என்ற சதா இதே நஷாவில் (பெருமையில்) இருங்கள்

கேள்வி: மேலே வீட்டுக்குச் செல்வதற்கான லிஃப்ட் (சாதனம்) எப்போது கிடைக்கும்? அந்த லிஃப்ட்டில் யார் அமர முடியும்?

பதில்: இப்போது சங்கமயுகத்தில் தான் வீட்டுக்குச் செல்வதற்கான லிஃப்ட் (சாதனம்) கிடைக் கிறது. எது வரை ஒருவர் தந்தையுடையவர்களாக ஆகவில்லையோ, பிராமணராக ஆக வில்லையோ, அது வரை லிஃப்ட்டில் அமர முடியாது. லிஃப்ட்டில் அமர்வதற்காக தூய்மை ஆகுங்கள். இரண்டாவது: சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றுங்கள் லி இவை தான் இறக்கைகள் போன்றவை. இந்த இறக்கைகளின் ஆதாரத்தில் வீட்டுக்குச் செல்ல முடியும்.

பாடல்: பொறுமையாக இரு மனமே......

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான சங்கமயுக பிராமணக் குழந்தைகள், சுயதரிசனச் சக்கரதாரிகள் எனச் சொல்லப்படுபவர்கள், இப்போது குப்த வேடத்தில் படித்துக் கொண்டுள்ளனர். உங்களை யாராலும் புரிந்து கொள்ள முடியாது லி இவர்கள் சங்கமயுக பிரம்மா முகவம்சாவளிகள் என்று. குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், நாம் சிவவம்சி பிரம்மா முக வம்சாவளி. ஆக, குலத்தின் நஷாவும் (பெருமிதம்) உள்ளது ஏனென்றால் நீங்கள் தான் ஈஸ்வரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். ஈஸ்வரனே அமர்ந்து உங்களைத் தம்முடையவர்களாக ஆக்கியிருக்கிறார், தம்மோடு அழைத்துச் செல்வதற்காக. குழந்தைகள் அறிவார்கள் என்றால் தந்தையும் அறிவார், அதாவது ஆத்மா தூய்மையை இழந்து விட்டது, இப்போது தூய்மையாக வேண்டும். இப்போது குழந்தைகளுக்கு நிச்சயம் ஏற்பட்டுள்ளது, நாம் சிவவம்சி பிரம்மா முக வம்சாவளிகள் தான் என்று. உங்கள் பெயரும் பிரம்மாகுமார் குமாரிகள் என்று உள்ளது. முழு உலகமும் சிவவம்சி. எப்போது முதலில் சிவபாபாவை அறிந்து கொண்டீர்களோ, அப்போதே பிராமணகுலத்தின் அணிகலன்களாகவும் ஆனீர்கள். இச்சமயம் நீங்கள் சரீரத்துடன் உள்ளபோது பாபாவுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள்.அவ்வாறே எப்போது நிராகாரி உலகத்தில் இருக்கிறீர் களோ, அப்போது நீங்கள் அனைவரிலும் உத்தம சிவவம்சிகள் ஆவீர்கள். ஆனால் எப்போது பாபா சரீரத்தில் பிரவேசமாகிறாரோ, அப்போது நீங்கள் பிரம்மா முகவம்சாவளி ஆகிறீர்கள். ஒரு விநாடியில் பாபா எதிலிருந்து என்னவாக ஆக்கி விடுகிறார்! பாபா என்று சொன்னதும் குழந்தை ஆகி விட்டீர்கள். எப்படி ஆத்மா வாயின் மூலம் பேசுகிறது, ஆனால் அதைப் பார்க்க முடியாது. அதே போல் நானும் இச்சமயம் சரீரத்தில் பிரவேசித்துள்ளேன். பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு சரீரம் கிடைக்காத வரை உங்கள் பாகத்தை எப்படி நடிக்க முடியும்? நீங்களோ குழந்தை, இளைஞர் மற்றும் வயோதிக நிலைகளில் வருகிறீர்கள். நான் இந்த நிலைகளில் வருவதில்லை. அதனால் எனது பிறவி திவ்யமானது, அலௌகிகமானது எனச் சொல்லப்படு கின்றது. நீங்களோ கர்ப்பத்தில் பிரவேசமாகிறீர்கள். நான் சுயம் சொல்கிறேன், பிரம்மாவின் உடலில், இவருடைய அநேக ஜென்மங்களின் கடைசி சமயம் வானப்ரஸ்த அவஸ்தாவில் பிரவேசமாகிறேன். மேலும் உங்களுக்கு அமர்ந்து

பாடம் சொல்லித் தருகிறேன். உங்களுக்கு எந்த ஒரு மனிதரும் கற்றுத் தரவில்லை. ஏனென்றால் எந்த ஒரு மனிதருக்கும் ஞானம் கிடையாது. பதீதலிபாவனா வாருங்கள் என அழைக்கின்றனர் என்றால் பதீதலிபாவனர் யார்? கிருஷ்ணரோ சத்யுகத்தின் முதல் இளவரசர். அவர் பதீதலிபாவனராக இருக்க முடியாது. மனிதர்கள் இறக்கும் தறுவாயில் ராம்லிராம் என்று சொல்லச் சொல்கின்றனர். யாரையாவது தூக்குமேடையில் ஏற்றும் போதும் பாதிரியார்கள், இறைத்தந்தையை நினைவு செய்யுங்கள் எனச் சொல்கின்றனர். ஏனென்றால் இறைத்தந்தை தான் சுகமளிக்கும் வள்ளல். தந்தை தான் அனைத்து இரகசியங்களையும் வந்து புரிய வைக்கிறார் லிலி இப்போது சங்கமயுகம், மேலும் நம்முடைய சுகத்தின் நாட்கள் வந்து கொண்டிருக்கின்றன. 84 பிறவிகள் முடிவடைந்தன. இப்போது சங்கமயுகத்தின் இனிமையான சமயம். இது தான் மேலே உயரச் செல்வதற்கான சமயமாகும். உயரச் செல்வதற்கான லி∴ப்ட் கிடைத்து விட்டது போலத் தான். ஆகையால் எது வரை தூய்மையாகவில்லையோ, சுயதரிசனச் சக்கரதாரி ஆகவில்லையோ, அது வரை லி∴ப்ட்டில் அமர முடியாது.

இச்சமயம் இறக்கை கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் மாயா இறக்கையைத் துண்டித்து விட்டுள்ளது. எப்போது பாபாவுடையவர்களாக ஆகின்றனரோ, பிராமணராக ஆகின்றனரோ, அப்போது தான் இறக்கை கிடைக்கின்றது. இப்போது சங்கமயுகத்தில் பிராமணர் கள், பிறகு தேவதை ஆகின்றனர். ஆக, நீங்கள் இப்போது சங்கமயுகத்தவராக இருக்கிறீர்கள், மேலும் சத்யுக ராஜதானியில் செல்வதற்கான புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். மற்றப்படி சுகத்தின் நாட்கள் அனைவருக்காகவும் வந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு தைரியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மற்ற உலகத்தினரோ பயங்கர இருளில் உள்ளனர்.

உங்களுக்கு பாபா சொல்கிறார், நீங்கள் சுயதரிசனச் சக்கரதாரி பிராமணகுல பூஷணர்கள். இதை யாராவது புதியவர்கள் கேட்டால் இவர்கள் எப்படி சுயதரிசனச் சக்கரதாரி ஆக முடியும், சுயதரிசனச் சக்கரதாரியோ விஷ்ணு அல்லவா எனக் கேட்பார்கள். அப்போது எவ்வளவு வித்தியாசம் ஆகிறது? உங்களுடைய புத்தியிலோ சக்கரம் முழுவதும் உள்ளது. இச்சமயம் நீங்கள் ஈஸ்வரியக் குழந்தை. பிறகு தெய்வீகக் குழந்தை ஆகிறீர்கள். அதன் பிறகு வைசிய, சூத்திரக் குழந்தையாக ஆகிறீர்கள். இச்சமயம் அனைத்தையும் விட உயர்ந்தது ஈஸ்வரிய குலம். உண்மையில் மகிமை அனைத்தும் சிவனுடையது. பிறகு சிவசக்திகளுடையது, பிறகு தேவதைகளுடையது. ஏனென்றால் நீங்கள் இச்சமயம் சேவை செய்கிறீர்கள். யார் சேவை செய்கின்றனரோ, அவர்களுக்குத் தான் பதவி கிடைக்கிறது. நீங்கள் ஆன்மிக சமூக சேவகர். உலகாயத சமூக சேவகர்கள் அநேகர் உள்ளனர். உங்களுக்கு இப்போது ஆன்மிக நஷா உள்ளது, நாம் அசரீரியாக வந்தோம். வந்து நம்முடைய சுயராஜ்யத்தை அடைந்தோம். உங்களுக்கு இப்போது பாபா மூலம் ஞானம் கிடைத்துள்ளது. நினைவு வந்துள்ளது லி இது ஸ்மிருதி லப்தா (சதா ஒருவரின் நினைவு) எனச் சொல்லப் படும். இப்போது பாபா தான் வந்து நினைவுப் படுத்துகிறார் லி நீங்கள் தான் தேவதையாக, சத்திரியராக ஆகியிருந்தீர்கள். இப்போது 84 பிறவி களுக்குப் பிறகு வந்து சந்தித்திருக்கிறீர்கள். இது சங்கமயுகத்தின் கும்பமேளா லி ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு. பரமாத்மா வந்து கற்றுத் தந்து

கொண்டிருக்கிறார், அதாவது அனைத்து சாஸ்திரங்களின் தாயாகிய கீதையின் ஞானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் கீதையில் கிருஷ்ணரின் பெயரைப் போட்டுள்ளனர். கிருஷ்ணராக இருந்தால் அனைவரும் அவரோடு ஒட்டிக் கொள்வார்கள். ஏனென்றால் அவர் மீது அதிகக் கவர்ச்சி உள்ளது. சத்யுகத்தின் முதல் இளவரசர் அவர். கிருஷ்ணரின் ஆத்மா இப்போது கேட்டுக் கொண்டிருக் கிறது. மேலும் கிருஷ்ணபுரியின் ஆத்மாக்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்போது உங்களுக்கு நினைவு வந்து விட்டது லி அதாவது நாம் தான் கிருஷ்ணபுரி அல்லது லட்சுமிலிநாராயணபுரியைச் சேர்ந்தவர்கள். பாபா ஞானம் நிறைந்தவர். பாபாவிடம் என்ன ஞானம் உள்ளதோ, அதை நமக்குத் தந்து கொண்டிருக்கிறார். என்ன ஞானம்? பரமாத்மா விதைவடிவம் எனச் சொல்லப் படுகிறார். அதனால் முழு மரத்தினைப் பற்றிய ஞானத்தைத் தந்து கொண்டிருக்கிறார். ஞானக்கடலாக உள்ளார், அதனால் அவர் பதீதலிபாவனர். எழுதும் போது புரிந்து கொண்டு எழுதுங்கள். முதலில் பதீதலிபாவனர் எனச் சொல்வதா, அல்லது ஞானக் கடல் எனச் சொல்வதா? நிச்சயமாக அவரிடம் ஞானம் உள்ளது, அதனால் தான் தூய்மை இல்லாதவர்களை தூய்மையாக ஆக்குவார். ஆக, முதலில் ஞானக்கடல், பிறகு பதீதலிபாவனர் என எழுத வேண்டும். இந்த ஞானக்கடலாகிய பாபா தான் சொல்கிறார் மனிதர்கள் 84 பிறவிகள் எப்படி எடுக்கின்றனர்? என்பதை. ஒருவரைப் பற்றி மட்டும் சொல்ல மாட்டார். இது இராஜ யோகத்தின் பாடசாலை. பாடசாலையிலோ அநேகர் இருப்பார்கள். ஒருவருக்கு மட்டும் படிப்பு சொல்லித்தர மாட்டார். நாம் சொல்கிறோம், அவர் தந்தை, ஆசிரியர் என்றால் அநேகருக்குப் படிப்பு சொல்லித் தருவார். பார்க்கிறீர்கள், எல்லையற்ற குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறார். மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மரம் கொஞ்சம்லிகொஞ்சமாக வளர்கிறது. கொஞ்சம் முளைத்து வெளிப்படும் பொழுது பறவைகள் தின்று விடுகின்றன. நீங்கள் பார்க் கிறீர்கள், இந்த மரத்திற்கு மாயாவின் புயல் அந்த மாதிரி வருகிறது, நல்லலிநல்லவர்களும் கூட சிதறிப் போகின்றனர். பாபா தொடக்கத்தில் குழந்தைகளின் இத்தகைய நடத்தையைப் பார்த்த போது சொன்னார், உங்களது நடத்தை அந்த மாதிரி இருக்கிறது, நீங்கள் இங்கே நிலைத்திருக்க முடியாது. அதனால் ஸ்ரீமத் படி நடந்து கொள்ளுங்கள். அவர்கள் சொன்னார்கள், என்ன நடந்தாலும் நாங்கள் ஓடிப்போக மாட்டோம் என்று. பிறகும் கூட அவர்கள் ஓடிப்போய் விட்டனர். அதனால் தான் பாடப் பட்டுள்ளது லி ஆச்சரியப்படும் படியாகக் கேட்டார்கள், சொன்னார்கள், பிறகு ஓடிப்போய் விட்டார்கள். ஆக, நீங்கள் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இது போல் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. ஏனென்றால் மாயா முன்னால் நின்று கொண்டுள்ளது, மல்யுத்தம் நடைபெறுகின்றது. இரண்டு பக்கங்களிலும் பயில்வான்கள் உள்ளனர். பிறகு சில நேரம் ஒருவருக்குத் தோல்வி, சில நேரம் இன்னொருவருக்கு வெற்றி. உங்களுக்கு இப்போது மாயாவுடன் யுத்தம். மாயாவை வெற்றி கொண்டு நீங்கள் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

பாபா சொல்கிறார், பாம்ஸ் லி வெடிகுண்டுகள் முதலானவை இது விநாசத்தின் அடையாளம் லி சாஸ்திரங்களில் எழுதப் பட்டுள்ளது, வயிற்றிலிருந்து ஏவுகணைகளை வெளிப்படுத்தி தங்கள் குலத்தை நாசம் செய்தனர். நீங்கள் அறிவீர்கள், பாபா தூய்மையான உலகை உருவாக்கு வதற்காக வந்துள்ளார்.

ஆக, பழைய உலகம் நிச்சயமாக விநாசமாக வேண்டும். இல்லை யென்றால் நாம் எங்கே இராஜ்யம் செய்வோம்? இந்தப் படிப்பின் பலனே வருங்கால புது உலகத்திற்காகத் தான். வேறு யாரெல்லாம் புருஷார்த்தம் செய்கின்றனரோ, அது இந்த உலகத்திற்காகத் தான். சந்நியாசிகள் புருஷார்த்தம் செய்கின்றனர் என்றால் அதுவும் இந்த உலகத்திற்காகத் தான். நீங்கள் சொல்கிறீர்கள், நாங்கள் இங்கே வந்து ஆட்சி செய்வோம். ஆனால் குப்த ரூபத்தில் இருக்கும் காரணத்தால் அடிக்கடி குழந்தைகள் மறந்து விடுகின்றனர். இல்லையென்றால் பெரிய மனிதர்கள் எங்கே சென்றாலும் எவ்வளவு வரவேற்பு செய்கின்றனர்! லண்டனில் இருந்து ராணி வந்தார் என்றால் எவ்வளவு விமரிசையாக வரவேற்றனர்! ஆனால் பாபா எவ்வளவு பெரிய அத்தாரிட்டி! ஆனால் குழந்தைகளைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. நாம் ஆடம்பரம் எதுவும் காட்டவும் முடியாது. ஏனென்றால் இது புது விஷயம். மனிதர்கள் குழப்பமடையவும் செய்கின்றனர், அதாவது இங்கே பிரம்மா எங்கிருந்து வந்தார் எனக் கேட்கின்றனர். ஏனென்றால் தற்காலத்திலோ நிறைய டைட்டில் (பட்டப் பெயர்) வைத்துக் கொள்கின்றனர். பாபா சொல்கிறார், இருள் நிறைந்த நகரம் எதையும் அறிந்திருக்க வில்லை. தந்தை வந்து விட்டிருக்கிறார் என்பது சாதுலிசந்நியாசிகளுக்குத் தெரிந்து விட்டது என வைத்துக் கொள்ளுங்கள், யாரை நாம் சர்வவியாபி எனச் சொல்லி வந்தோமோ, அவர் இப்போது வந்து முக்திலிஜீவன்முக்தி கொடுத்துக் கொண்டிக்கிறார். நல்லது, இதை அறிந்து கொண்டு விட்டார்கள் என்றால் வந்து அதைப் பெற்றுக் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். அந்த மாதிரி காலைப் பிடித்துக் கொள்வார்கள். அதை என்னால் விடுவிக்கவும் முடியாதபடி. அப்படி ஆகுமானால் அனைவரும் சொல்வார்கள், இவர்களிடம் மாயமந்திரம் உள்ளது, மற்ற குருக்களின் புத்தி கெட்டுப்போய் விட்டது. ஆனால் அது போல் இப்போது நடக்கப் போவதில்லை. இது கடைசியில் நடைபெறும். சொல்கின்றனர் இல்லையா, கன்யாக்கள் பீஷ்ம பிதாமகர் மீது பாணம் எய்தனர் என்று? இதையும் காட்டுகின்றனர் லி பாணம் எய்ததால் கங்கை வெளிப்பட்டது. ஆகவே இதிலிருந்து தெளிவாகிறது லி கடைசியில் அனைவரையும் ஞான அமிர்தம் அருந்தச் செய்தார். மனிதர்களோ எதையும் அறிந்திருக்கவில்லை. பரமாத்மாவோ சர்வவியாபி எனச் சொல்லி விடுகின்றனர். புத்தரையும் சர்வவியாபி எனச் சொல்லி விடுகின்றனர். இது கல்புத்தி எனச் சொல்லப் படும். நாமும் கூட முதலில் கல்புத்தி உள்ளவர்களாக இருந்தோம். ஆக, பாபா வந்து புரிய வைக்கிறார், இறைத் தந்தையை ஒரு போதும் சாகாரி (ஸ்தூல உலக மனிதர்) அல்லது ஆகாரி (சூட்சும உலக ஒளி தேவதை) எனச் சொல்ல மாட்டார்கள். அவரோ நிராகார். அவர் சுப்ரீம் ஸோல் (மிக மேலான ஆத்மா) எனச் சொல்லப் படுகிறார். அரைக்கல்பம் நீங்கள் பக்தி செய்தீர்கள். சொல்கின்றனர் இல்லையா, பக்தி செய்துலிசெய்தே பகவான் கிடைப்பார் என்று, ஆனால் நிச்சயமாக பக்தி செய்துலிசெய்தே துர்கதியை அடைந்துள்ளனர், பிறகு தந்தை வருகிறார் சத்கதி அளிப்பதற்காக. அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் எனச் சொல்லவும் செய்கின்றனர் இல்லையா? ஆக, மனிதர்கள் புரிந்து கொள்ளவில்லை, பரமாத்மா எப்போது மற்றும் எந்த ரூபத்தில் வந்தார் என்று. துவாபர யுகத்தில் கிருஷ்ணர் ரூபத்தில் வருவார் லி இப்படிச் சொல்வது காரிருள் எனச் சொல்லப்படும். சொல்கின்றனர் இல்லையா? கும்பகர்ணனின் உறக்கத்தில் இருந்து எழுப்பினாலும் எழவில்லை. ஆக, இப்போது பாபாவின் கட்டளை வந்துள்ளது லி தூய்மையாகுங்கள் மற்றும் பகவானிடம் இருந்து நேரடியாக கீதையைக் கேளுங்கள். ஏழு நாள்

குவாரன்டைனில் (வெளியுலகத் தொடர்பின்றி) அமர்த்தி வையுங்கள். தானம் கொடுத்தால் கிரகணம் விட்டுப் போகும். இப்போது அனைவரையும் 5 விகாரங்களின் கிரகணம் பிடித்துள்ளது. அதனால் தூய்மை இல்லாதவர் களாகி விட்டுள்ளனர். இராவண இராஜ்யம் இல்லையா? இப்போது பாபா சொல்கிறார், குழந்தைகளே, நீங்கள் என்னுடையவராக ஆகுங்கள், ஒருவரைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ 108 சொல்லும் ஸ்ரீமத் படி நடப்பதால் நீங்கள் 108 விஜயமாலையின் மணியாக ஆகி விடுவீர்கள். நான் மாலையின் மணியாக ஆவதில்லை. நானோ விலகி யிருக்கிறேன் லி இதன் அடையாளம் பூவாகும். யுகல் மணியாக பிரம்மாலிசரஸ்வதி ஆகின்றனர். இல்லற மார்க்கம் இல்லையா? துறவற மார்க்கத்தினர் மாலையின் மணியாக வர முடியாது. ஆம், தூய்மையை தாரணை செய்கின்றனர் என்றால் பிறகும் கூட நல்லது தான். ஆனால் இந்த குரு சத்கதி அளிக்க முடியாது. சத்கதி அளிக்கும் வள்ளல் ஒரே ஒரு சத்குரு மட்டுமே. சத்குரு அகால் (அழியாதவர்) எனச் சொல்கின்றனர். சத்குரு என்றோ ஒரு பரமாத்மா மட்டுமே சொல்லப்படுகிறார். உலகாயத மனித குருக்கள் அகாலமூரத் ஆக முடியாது. லௌகிக் தந்தை, ஆசிரியர், குருவையோ காலன் விழுங்கி விடுவான். என்னைக் காலன் விழுங்க முடியாது. பாபா எவ்வளவு நல்லலிநல்ல விஷயங்களைப் புரிய வைக்கிறார்! யார் இந்த சுலபமான விஷயங் களையும் புரிந்து கொள்ள முடியவில்லையோ, அவர்களுக்குச் சொல்கிறார், நல்லது, தந்தையை நினைவு செய்யுங்கள். சக்கரத்தையும் நினைவு செய்ய வேண்டும். தந்தையுடன் கூடவே ஆஸ்தியையும் நினைவு செய்ய வேண்டும். தந்தையை நினைவு செய்வீர்களானால் விகர்மங்கள் பஸ்மமாகும். தந்தையோ நம் முன்பாக வந்துள்ளார். தந்தை அசரீரி எனச் சொல்லப்படுகிறார். பிரம்மா விஷ்ணு சங்கர் அனைவருக்கும் அவரவர் சரீரம் உள்ளது. எனக்கோ எனது சரீரம் என்பது கிடையாது. உங்களுக்கோ மாமா, சித்தப்பா, பெரியப்பா எல்லாரும் உள்ளனர். எனக்கு மாமா, சித்தப்பா யாரும் கிடையாது. நான் வரவும் செய்கிறேன். ஆனால் நீங்கள் எப்படி வருகிறீர்கள்? நான் எப்படி வருகிறேன்? இறைத்தந்தையே வாருங்கள் என அழைக்கின்றனர். ஆனால் எங்கிருந்து வருகிறேன்? பரந்தாமத்திலிருந்து. எங்கிருந்து நீங்கள் வருகிறீர்களோ, அது பிரம்மாண்டம் எனச் சொல்லப்படுகிறது. இச்சமயம் நீங்கள் பிரம்மா முகவம்சாவளி ருத்ர யக்ஞத்தின் காப்பாளர்கள் (இரட்சகர்). இராஜயோகக் கல்வி கற்றுத் தருபவர்கள். இராஜயோகம் கற்பிக்கும் ஆசிரியர்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா? நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய்லிதந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மாலையின் மணியாக ஆவதற்கு எனக்கோ ஒரு சிவபாபாவைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஸ்மிருதிலப்தா (சதா ஒருவரின் நினைவில் இருப்பவராக) ஆக வேண்டும். இந்த தாரணையைப் பக்காவாக செய்ய வேண்டும்

2. ஸ்ரீஸ்ரீ 108 சிவபாபாவின் ஸ்ரீமத்படி முழுமையாக நடக்க வேண்டும். எனதுலிஎனது என்பதை விட்டு கிரகணத்தில் (மாயை பிடியிலிருந்து) விடுபட வேண்டும்.

வரதானம் : பிராமண வாழ்க்கையில் சதா சுகத்தின் அனுபவம் செய்யக்கூடிய மாயாவை வென்றவர், கோபத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக.

பிராமண வாழ்க்கையில் சுகத்தின் அனுபவம் செய்ய வேண்டுமானால் கோபத்தை வென்றவராக ஆக வேண்டியது மிகவும் அவசியமாகும். யாராவது நிந்தனை செய்தாலும், அவமரியாதை (இன்சல்ட்) செய்தாலும், உங்களுக்குக் கோபம் வரக்கூடாது. அதிகார தோரணையைக் காட்டி பயமுறுத்துவதும் கூட கோபத்தின் அம்சமாகும். கோபப்படத் தான் வேண்டியிருக்கிறது, இல்லையென்றால் காரியம் ஆகாது என்று அந்த மாதிரி இல்லை. இன்றைய காலத்தின் படி கோபத்தால் காரியம் கெட்டுப் போகிறது மற்றும் ஆத்மிக அன்பால், அமைதியாக இருப்பதால் கெட்டுப்போன காரியமும் கூட சரியாகி விடும். ஆகவே இந்தக் கோபத்தை மிகப்பெரிய விகாரம் என உணர்ந்து, மாயாவை வென்றவராக, கோபத்திலிருந்து விடுபட்டவராக ஆகுங்கள்.

சுலோகன்: அநேக ஆத்மாக்கள் உங்கள் உள்ளுணர்வு மூலம் தகுதியுள்ளவர் மற்றும் யோகி ஆகிற அளவுக்குத் தனது உள்ளுணர்வை சக்திசாலி ஆக்கிக் கொள்ளுங்கள்.